குழு கூட அதைப் பரிந்துரை செய்திருக்கிறது. விவசாயிகளுக்கு நிரந்தரமாகப் பரிகாரம் காண வேண்டுமேயானால் தஞ்சையிலே உள்ள இரண்டரை ஏக்கருக்கும் பெரியார் மாவட்டத்திலே உள்ள இரண்டரை ஏக்கருக்கும் நஞ்சையோ புஞ்சையோ கண்டிப்பாக மாறுபாடு உண்டு என்பதை அரசு உணர்கின்ற காரணத்தினால் வருவாயின் அடிப்படையில் ஸ்டாண்டர்ட் ஏக்கராவை ஃபிக்ஸ் செய்ய வேண்டும் கடன் சலுகைகளைப் பொறுத்தவரைக்கும் என்பதனை அரசு ஆய்ந்து வருகிறது.

கூட்டுறவு சங்கங்களைத் தணிக்கை செய்ய தனி அமைப்பு.

***வினா எண் 92—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கூட்டுறவுச் சங்கங்களை ஆடிட் செய்வதற்கு தனியானதொரு அமைப்பை ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம். (ஆ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின்கீழ் இயங்கிவரும் நிர்வாகப் பிரிவையும் தணிக்கைப் பிரிவையும் தனித் தனியாகப் பிரித்துக் கூட்டுறவுத் தணிக்கைப் பிரிவை ஒரு தனித் துறையாக இயங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் தணிக்கை துறையில் தலைவர் ''கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர்'' என அழைக்கப்படுவார். இப்புதிய துறை தலைமைச் செயலக நிதித் துறையின் கீழ் இயங்கும். ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை அரசு, கூட்டுறவு தணிக்கை இயக்குநராக நியமித்துள்ளது. அவர் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளில் இருந்து அப்பதவியை வகித்து வருகிறார்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தணிக்கைக்காக தனியாக அதிகாரி நியமிக்கப்பட்ட பிறகு அதன் அனுபவம் என்ன ? இதில் அரசு எப்படி அணுகுகிறது? இப்படிப் போடுவதற்கான அவசியம் என்ன ஏற்பட்டது? அதனுடைய விளைவைப்பற்றி அரசு என்ன கருதுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிர்வாகத்தை நடத்துகின்றவர்களிடமே நிர்வாகத்தில் எற்படும் குறைபாடுகள், சீர்கேடுகளைக் கண்டறியும் பணிகளை கொடுப்போமேயானால் திருடனிடமே பாதுகாப்பு கொடுப்பதைப்போல் இருந்து விடும்.

1982 பிப்ரவரி 8]

என்பதால் தனித்தனியாக அந்தப் பிரிவு இயங்க வேண்டும் என்ற காரணத்தினால் Administrative department is absolutely different from the inspecting and auditing department என்ற முறையில் தனித்தனியாக இயங்குகின்றபொழுதுதான் தன்னிச்சையாக அவர்களால் செயல்பட முடியும் என்ற பரிந்துரை அரசுக்கு வந்ததால் அந்தப் பரிந்துரையை ஏற்று அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் நிறுவனம், செட்டிப்பேடு.

வினா எண் 93—திருமதி டி. யசோதா : மாண்புமிகு தொழிலாளர் நலததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செட்டிப்பேடு ஊரிலுள்ள ஸ்ரீராம் கெமிகல்ஸின் புதிய உரிமையாளர் அங்கு ஏற்கெனவே பணி புரிந்த ஊழியர்களை நீக்கிவிட்டு தன்னுடைய ஊரிலிருந்து ஆட்களை அழைத்து வேலைக்கு அமர்த்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா !

(ஆ) ஆம் என்றால் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிகக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா !

மாண்புமிகு திரு . எஸ்.இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஸ்ரீராம் கெமிகல்ஸ் காம்ப்லெக்ஸ் நிர்வாகம் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியன் குளு கார்ப்பரேஷன் (Indian Glue Corporation) இடமிருந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டது. புதிய நிர்வாகத்தற்கும், தொழிலாளர்களுக்கும் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 18 (1) இன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 3 இன் கீழ் பழைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்களில் 32 தொழிலாளர்களுக்குப் புதிய நிர்வாகம் வேலை கொடுத்துள்ளது. மீதமுள்ள 17 தொழிலாளர்களுக்கும் வேலை கோரி தொழிற்சங்கத்தால் எழுப்பப்பட்ட தொழிற் தகராறு பின்னர் பிரதிநிதித்துவம் இல்லையென திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் நேரடித் தொழிலாளர்கள் அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து வந்து பணி புரிகிறார்கள். ஒப்பந்தக்காரர் கீழ் பணி புரிபவர்கள் மட்டுமே திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டாரத்தில் உள்ள ' அழகாபுரி ' என்ற ஊரிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள்.